# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


கடித எண்.7/2021 நாள்.01.03.2021

பெறுநர் :

**இயக்குநர்** அவர்கள்,
பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை
சென்னை – 600 006

அய்யா,

பொருள் : பணியமைப்பு – திரு. ஏ. சேகர், பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் – பதவி உயர்வு பட்டியலில் பெயர் விடுப்பட்டது – பதவி உயர்வு வழங்கிட கோருதல்

பார்வை , அரசாணை (நிலை)எண்.9/பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(கே)துறை நாள்.2.2.2021

*****

எமது சங்கத்தின் மாவட்டச் செயலாளராக செயல்பட்டு வருபவரும், தருமபுரி மாவட்டம், பெல்ரம்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருபவருமான திரு. ஏ. சேகர் அவர்கள் 2019–20 ம் ஆண்டிற்கான மருத்துவமல்லா மேற்பார்வையாளர் (NMS) / வட்டார சுகாதார மேற்பார்வையாளர் (BHS) பதவி உயர்வு கலந்தாய்வில் அனுமதிக்கப்படவில்லை. கடந்த 22.1.,2019 முதல்30.1.2019 வரை நடைப்பெற்ற ஜாக்டோ–ஜியோ பேரமைப்பின் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்துக் கொண்டதாக கூறி 17(b) குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது.

பார்வையில் காணும் அரசாணையின்படி, வேலை நிறுத்த போராட்டத்தில் கலந்து கொண்ட அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தொடரப்பட்டு, நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் அனைத்தையும் அரசு கைவிடுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், 2019–20 ம் ஆண்டிற்கான மருத்துவமல்லா மேற்பார்வையாளர் (NMS) / வட்டார சுகாதார மேற்பார்வையாளர் (BHS) பதவி உயர்வு கலந்தாய்வில் திரு. ஏ. சேகர், பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர் அவர்களின் பெயர் சேர்க்கப்படவில்லை

எனவே திரு. ஏ. சேகர், அவர்களின் பெயரினை 2019–20 ம் ஆண்டிற்கான மருத்துவமல்லா மேற்பார்வையாளர் (NMS) / வட்டார சுகாதார மேற்பார்வையாளர் (BHS) பதவி உயர்வு பட்டியலில் இணைத்து உடனடியாக பதவி உயர்வு வழங்கிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ. செல்வம்)**
பொதுச்செயலாளர்